**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.65/2024 – PW- 9**

| | |
|---|---|
| Name | திருமதி. பாஞ்சாலை |
| Husband/Father Name | விநாயகம் |
| Village /Area | கர்ணாவூர் |
| Taluk | நெமிலி |
| Occupation | கிராம உதவியாளர் |
| Age | 36 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 29.08.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் சிறுவளையம் கிராமத்தில் கிராம உதவியாளராக பணியில் உள்ளேன். கடந்த 11.07.2021 அன்று நெமிலி காவல் நிலையத்தில் இருந்து தகவல் வந்ததன் அடிப்படையில் நானும் கிராம நிர்வாக அலுவலரும் சிறுவளையம் பேருந்து நிறுத்தத்திற்கு சென்றோம். அங்கு பிரசாந்த் என்பவர் குழந்தையின் மீது கல்லை போட்டது சம்பந்தமாக விசாரிக்க உள்ளதாக கூறினார்கள். மேற்படி விசாரணையின் அடிப்படையில் எங்களை சாட்சியாக இருக்க கேட்டு கொண்டதன் அடிப்படையில் நான் கையொப்பம் இட்டேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அது **அதசாஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

காவல் நிலையத்தில் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். கிராம நிர்வாக அலுவலரும் அங்கு தான் கையொப்பம் இட்டாரா என்றால் ஆமாம். சிறுவளையம் பேருந்து நிலையம் அருகே நாங்கள் செல்லவில்லை என்றும் போலீசார் எங்கள் முன்னிலையில் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்றும் எதிரியையும் நான் அங்கு பார்க்கவில்லை என்றும் போலீசார் தயார் செய்த ஆவணத்தில் நான் கையொப்பம் இட்டேன் என்று சொன்னால் சரியல்ல.

Jayamangalam Sudhakaran
II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.08.29 15:40:24 +0545

II Additional District and Sessions Judge,
Arakkonam.